FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
Media Freedom Rights Monitoring Report

MFRMD

2021 தொகுதி 01 ஜனவரி

# ஊடக சுதந்திர உரிமை கண்காணிப்பு அறிக்கை

'Media Freedom Rights Monitor' அறிக்கையானது சுதந்திர ஊடக இயக்கத்தினால் 2021 ஜனவரி முதல் மாதாந்த வெளியீடாக பிரசுரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இவ் அறிக்கையே அத்தொடரின் முதல் வெளியீடாகவும் காணப்படுகின்றது. இந்த அறிக்கையில் ஒரு சுருக்கமான கண்காணிப்பு மற்றும் ஊடக சுதந்திரத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்கள், நிகழ்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

"Media Freedom Rights Monitor" வருடாந்த அறிக்கையொன்றை வெளியிடுவதற்கும் சுதந்திர ஊடக இயக்கம் எதிர்பார்கின்றது,அவ் அறிக்கையானது ஊடக சுதந்திரத்தை பாதிக்கும் பல்வேறு காரணிகளின் விரிவான பகுப்பாய்வை வழங்க கூடியதாக இருக்கும் என நம்புவதுடன்,2020 ஆம் ஆண்டிற்கான தொடக்க முதல் அறிக்கையானது உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு 2021 மே மாதம் 03 ஆம் திகதி வெளியிடப்படும்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச நீதிமன்ற முடிவுகள் மற்றும் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரத்தின் உலகளாவிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகள் உள்ளிட்ட சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான முயற்சிகள் குறித்த வெளியீடுகள் இந்த அறிக்கையைத் தொகுப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முயற்சியின் வெற்றி மற்றும் மேம்பாட்டிற்கு உங்கள் கருத்து மிகவும் இன்றியமையாததாக காணப்படும் அதே வேலை, சுதந்திர ஊடக இயக்கத்தின் சார்பாக உங்கள் கருத்துக்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மின்னஞ்சல்: fmm.mfrm@gmail.com

**சீதா ரஞ்சனி**
தலைவர்

# முன்னுரை

2020 ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20 ஆம் திருத்த சட்டம் ஊடாக ஜனநாயகத்துக்கு ஏற்படும் தாக்கம் மற்றும் சவால்கள் தொடர்பில் வெவ்வேறுபட்ட யோசனைகள் மற்றும் கருத்துக்கள் 2021 ஜனவரி மாதம் வரை சமூகத்தில் நிலவியமை காணக்கூடியதாக இருந்தது.20ம் திருத்த சட்டம்ஊடாகசுயாதீனஆணைக்குழுக்களுக்குஉறுப்பினர்நியமனம், நீதிபதி உள்பட்ட உயர் அதிகாரிகள் நியமனம் தொடர்பாக சகல அதிகாரங்களும் நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் நிறுவப்பட்டமை கருத்து சுதந்திரத்துக்கு மறைமுக தாக்கம் செலுத்துவதாக ஊடக ஆர்வலர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன்,அது தொடர்பில் முன்வைக்கப்படும் தீங்குகள் ,மற்றும் ஆபத்துக்கள ஊடகங்கள் வாயிலாக முன் கொண்டுவரப்பட்டது. எனவே ஜனவரி மாதமானது இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையிலையிலேயே துவங்கியது.

ஊடக சுதந்திரம் மற்றும் உரிமைகள் தொடர்பாக ஊடக செயற்பாட்டாளர்களின் கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான மூன்று போக்குகளை ஜனவரி மாதத்திற்குள் ஊடக துறை கண்காணிப்பின் போது கண்டுகொள்ள முடியுமாக இருந்தது.

1. அரசாங்கத்தால் சமூக ஊடக வலைத்தள பாவனையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பயங்கரவாத தடுப்பு சட்டம் ,மற்றும் ஐ.சி.சி.பி.ஆர் சட்ட நடவடிக்கைகள்.
2. பாதிப்புக்குள்ளாகும் சில ஊடகவியலாளர்கள் அரசியல் அழுத்தம் காரணமாக தமது பிரச்சினைகளை தாமே தீர்த்துக்கொள்வதற்கு உடன்பாடு தெரிவித்தல்.
3. ஆசிரியர் சபை சுயாதீன தன்மைக்கு அச்சுறுத்தல் விடுத்தல் .

ஊடக சுதந்திர மற்றும் உரிமை தொடர்பில் ஊடக செயற்பாட்டாளர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள மேலே குறிப்பிட்ட மூன்று போக்குக்களுக்கு தொடர்பான ஒன்பது நிகழ்வுகள் ஜனவரி மாத காலப்பகுதியில் சுதந்திரம் ஊடக இயக்கம் கண்டறிந்ததுடன் ,இந்நிகழ்வுகள் ஜனவரி மாதத்திற்குள் புதிதாக எழுந்த நிகழ்வுகள் மற்றும் அதற்கு முன் நடந்த சம்பவங்களின் வளர்ச்சி போக்குகலுமே ஆகும்.இதில் சில சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் இணைய வலைத்தளங்களின் மற்றும் சமூக ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இன்னும் சில நிகழ்வுகள் சுதந்திரம் ஊடக இயக்கத்திற்கு நேரடியாக கிடைக்கப்பெற்றவையாகவும் காணப்படுகின்றன. அதில் சில நிகழ்வுகள் சமூக ஊடக வலைத்தளங்களில் பதிவிடல் அல்லது கருத்து தெரிவித்தல் தொடர்பாக எழுந்த நிகழ்வுகள் என்ற போதிலும் கருத்து தெரிவிக்கும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் பெறுமதிகளை மீறி அதற்கு அப்பாற்பட்டவையாக அல்லது பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக நடைபெற்றுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அந்நிகழ்வுகள் சுருக்கமாக:

1. ICCPR சட்டத்தின் கீழ் கைதான இள தொழிலதிபர் Fazl Muhammed Nizar. இவர் இணைய வலைத்தளங்களுக்கு கட்டுரைகள் பதிவிடும் எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
2. பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் செயற்பாட்டாளர் மற்றும் சுயாதீன ஊடகவியலாளருமான முருகாபிள்ளை கோகில தாசன் இன்னும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல்.
3. இராஜாங்க அமைச்சரினால் "மவ்பிம" ஆசிரியர் சபை இயக்குனர் மற்றும் ஊடகவியலாளரான சிசிர பரனதத்திரீக்கு மற்றும் மவ்பிம ஊடகவியலாளர் சிரான் ரணசிங்கவுக்கு அச்சுறுத்தல் விடுத்தல்.
4. சுற்றுச்சூழல் ஆர்வலர் லக்மால் ரணபாஹு தாக்கபடுத்தல் சம்பவம்.
5. மாற்று ஊடக துறையில் பழமையானதுமான "ராவய" செய்திபத்திரிக்கையின் செய்தி ஆசிரியரை வேலை நிறுத்தம் செய்தமை.
6. பிரகீத் எக்னேலிகொட காணாமல் ஆக்கப்பட்டு 11 வருடகால நினைவை ஒட்டி இணைய வலைத்தள நிறுவல்.
7. படுகொலை ,தாக்கப்படுதல் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் நிகழ்வு.
8. "கறுப்பு ஜனவரிக்கு 11 வருடம்" நிகழ்வை ஒட்டி சுதந்திர ஊடக இயக்கத்தினால் வெளியிட்ட ஊடக அறிக்கை மற்றும் "ஜனவரி இன்னும் கறுப்பு" எனும் கருப்பொருளில் முகப்புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட சமூக ஊடக பிரச்சார நடவடிக்கை ஜனவரி 29 திகதி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகறமாக நிறைவேற்றப்பட்டது.
9. ஐரோப்பிய ஒன்றியத்தினால் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க வேண்டி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

## அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள்:

**1 ஆம் பட்டியல் : 2021 ஜனவரி**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகள்: | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 04 |
| 02 | ஊடக சுதந்திரம் மற்றும் சுயாதீனம் | 01 |
| 03 | சட்டரீதியான பிரச்சினை | 04 |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடக சுதந்திர உத்தரவாதம் என்பது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மன ரீதியாக ஓர்முகப்படுத்தி சுயாதீனமாக தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழல் ஆகும்.இந்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்திய நான்கு சந்தர்ப்பங்களை சுதந்திர ஊடக இயக்கம் ஜனவரி மாதத்திற்குள் தனது கவனத்தில் கொண்டுவந்துள்ளது.**

**2ம் பட்டியல்: 2021 ஜனவரி : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாத தொடர்பான நிகழ்வுகள் 04**

| இலக்கம் | நிகழ்வுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தாக்கப்படுதல் | 01 |
| 02 | கைது நடவடிக்கை | 02 |
| 03 | அச்சுறுத்தல் நடவடிக்கை | 01 |

1. இளவயது தொழில் அதிபரான Fazl Muhammed Nizar கைது செய்தமை.

அவரை 2007 இலக்கம் 56 கொண்ட ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன்.தனது முகநூல் பக்கத்தில் இனங்களுக்கு மத்தியில் சகவாழ்வுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்தல் என்ற குற்றசாட்டில் பேரில் குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தினால் Fazl Muhammed Nizar என்ற நபர் 2021-01-12 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.அவர் கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டபோது பிரதான நீதிபதி மொஹமட் மீகார் அவரை 2021-02-08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குற்றவியல் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு வழங்கிய குற்றச்சாட்டுக்களில் அறிக்கையிடப்பட்டிருப்பவையாவன:

இந்த சந்தேகநபர் இனங்களுக்கு மத்தியில் சகவாழ்வு மற்றும் சகோதரதத்துவத்தை சீர்குலைக்கும் நோக்கில் பிக்குமார்கள்

உட்பட வெவ்வேறு தரப்பினர்களுக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் விதத்தில் வெவ்வேறு கருத்துக்களை முகநூல் ஊடாக வெளியிட்டிருப்பதாகவும், இதன் ஊடாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை சட்டத்தை மீறி செயற்பட்டுள்ளார் என குறித்த குற்ற புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த நபர் நேரடியாக ஜனாதிபதியை குறிப்பிட்டு பேசிய காணொளிபதிவை முகப்புத்தகத்திற்கு பதிவேற்றம் செய்யப்படமையே இவரை கைதுசெய்வதற்கு பிரதான காரணமாக அமைந்ததுடன், ஜனாதிபதி அம்பாறையில் தெரிவித்திருந்த கருத்துக்கள் அதாவது நாட்டு மக்களின் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்திய உறைக்கு இக்கானோளியின் மூலம் இந்தநபர் ஜனாதிபதியை விமர்சித்து இருப்பதுடன் பிக்குமார்களுக்கு தகாத வார்த்தைகளை பயன்படுத்தி நிந்தித்துப் பேசியமையும் அக்கானோளியின் இறுதியில் காணகூடியதாக உள்ளது.

தெஹிவள பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட, தொழிலில் வியாபாரியுமான Fazl Muhammed Nizar https://www.colombotelegraph.com செய்தி வலைத்தளத்திற்கு கட்டுரை வெளியிடும் ஒரு எழுத்தாளராகவும் காணப்பட்டுள்ளார். 2014 மே 05 ஆம் திகதியில் இருந்து 2018 ஒகஸ்ட் 29 ஆம் திகதி வரை அவர் அந்த செய்தி வலைத்தளத்திற்கு 26 கட்டுரைகளை எழுதியுள்ளார். http://bit.ly/3oIlDVz

2. பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள முருகபிள்ளை கோகிலதாசன் இன்னும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை.

முருகபிள்ளை கோகில தாசன் வாழைச்சேனை வதிவிடமாக கொண்ட மட்டகளப்பை தளமாக கொண்டு ஊடகவியலாளராக பணிபுரியும் சுயாதீன ஊடகவியலாளராக திகழ்பவர். தமிழ் அரசு கட்சியுடன் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடும் இவர் 2018ஆம் ஆண்டு உள்ளுராட்சி அதிகார சபை தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும் ஆவர்.2020-11-18 திகதி வாழைச்சேனை காவல்துறையினரால் அவர் கைதுசெய்யப்பட்டதுடன் அவரின் கைதுக்கு காரணமாக அமைவது அவரால் தனது முகப்புத்தகத்தில் "மாவீரர்" நினைவுகூர்தல் தொடர்பாக வெளியிட்ட கூற்று மற்றும் இரண்டு புகைப்படங்களேயாகும். காவல்துறையினர் முன்வைக்கும் குற்றச்சாட்டானது அவரால் வெளியிடப்பட்ட பதிவானது எல்.டி.டி .இ இயக்கத்தின் கொள்கைக்கு வலுசேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளமை என்பதேயாகும். அதன் பிரகாரம் பயங்காரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் பிரசுரிக்கபட்ட 29-08-2011 வர்த்தமானியின் படி சட்ட ஏற்பாடுகளை மீறியுள்ளதாக குற்றம்சாற்றப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு உயர் நீதிமன்றத்தில் மட்டுமே பிணை வழங்க முடியும் என்பதுடன் அது தொடர்பில் வழக்கறிஞர் காலிங்க இத்ததிஸ்ஸ நீதிபதிக்கு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

கோகில தாசனுக்கு எதிரான வழக்கு 2020-01-25 ஆம் திகதி வாழைச்சேனை மாஜிஸ்திரேட் நீதிபதி முன்னிலையில் விசாரணையிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இன்னும் 14 நாள் சிறைப்படுத்த மாஜிஸ்திரேட் நீதிபதி உத்தரவிட்டார்.அடுத்த வழக்கு பெப்ரவரி 08 ஆம் திகதி ஆகும்.

3. இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவினால் "மவ்பிம" பத்திரிக்கை ஆசிரிய குழு இயக்குனரான சிசிர பரனதத்ரீ மற்றும் அமைச்சரவை உறுப்பினரின் செயலாளரினால் "மவ்பிம" ஊடகவியலாளர் சிரான் ரணசிங்கவுக்கு அச்சுறுத்தல் விடுத்தல்.

ஊடகவியாலளர் சிசிர பரனதன்த்ரீ தமக்கும் மற்றும் தனது செய்திப்பத்திரிகையில் பணிபுரியும் ஊடகவியலாளரான ஷசிரான் ரணசிங்கவுக்கும் தொலைபேசியூடாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து ஜனவரி 17 ஆம் திகதி குருந்துவத்த காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மஹரகம நகர அபிவிருத்தி நடவடிக்கையின் போது கடைகளை இடித்தல் நடவடிக்கையில் காவல்துறை அதிகாரிகளை ஈடுபடுத்தியமை தொடர்பில் மவ்பிம செய்திபத்திரிகையில் கட்டுரை பிரசுரிக்கப்பட்டது சம்பந்தமாக காவல் துறை பொறுப்பு ராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகவின் செயலாளரினால் அச்செய்தியை எழுதிய ஊடகவியலாளரான சிரான் ரணசிங்கவுக்கும், அமைச்சரினால் மவ்பிம பத்திரிகை ஆசிரிய குழு இயக்குனரான சிசிர பரனதத்ரீக்கும் தொலைபேசி ஊடாக நிந்திக்கும் வகையில் கதைத்து அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக www.theleader.lk செய்தி இணையதளத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. https://theleader.lk/news/5542-2021-01-19-16-40-03

இருப்பினும் மவ்பிம செய்திபத்திரிகை இந்த அச்சுறுத்தல் தொடர்பாக எந்த விதமான அறிக்கையிடுதலோ ,செய்தி கட்டுரையோ வெளியிட்டு இருக்கவில்லை.மவ்பிம ஆசிரியர் பெநெட் ரூபசிங்கவிடம் வினவியபோது அப்படியொரு முறைப்பாடு மேற்கொள்ளபட்டிருப்பதை உறுதிப்படுத்தி இருப்பதுடன் மேலதிக விபரங்கள் வெளியிடுவதை தவிர்த்துக்கொண்டார்.பின்னர் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய தெரிந்து கொண்ட விடயம், எவ்வித சட்ட நடவடிக்கைகளுக்கும் செல்லாமல் அவ்விரு தரப்பினர்களும் சுமூகமாக அப்பிரச்சினையை தீர்த்துகொண்டுள்ளனர்.

4. சுற்றுச்சூழல் ஆர்வலரான லக்மால் ரணபாஹு தாக்கப்பட்ட சம்பவம்:

2021-01-24 ஆம் திகதி கலவான பிரதேசத்தில், சுயாதீன ஊடகவியலாளரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான லக்மால் ரணபாஹுவுக்கு சில நபர்களால் மிக மோசமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் அவரின் ஒரு கை முறிந்ததுடன் முகம் மற்றும் உடம்பிற்கு காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள அதே சமயம் அவர் சில நாட்கள் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்துள்ளார்.

அவர் இணையத்தள வலைத்தளத்திற்கு கட்டுரைகள் எழுதுபவராவர் இருந்த போதிலும் அவர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது ஊடக அறிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டபோது அல்ல .பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சூழலியல் பிரச்சினை தொடர்பாக கலவான பிரதேச செயலாளரிடம் முறைப்பாடொன்றை மேற்கொண்டு மீண்டும் வீடுதிரும்பி கொண்டிருக்கும் சந்தர்பத்திலேயே ஆகும்.குறிப்பிட்ட பிரதேச செயலாளரின் கணவர் உட்பட இன்னும் சில நபர்களே தாக்குதல் நடத்தியதாக அவர் கலவான காவல் நிலையத்திற்கு புகார் அளித்துள்ளதுடன் தாக்குதல் தொடுக்கப்பட்ட நபர்களை கைது செய்து பின்னர் பிணையில் விடுதலை செய்துள்ளதுள்ளதாகவும் இன்னும் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் ஏதும் தொடுக்கப்படவில்லை எனவும் அறியக்கிடைக்கின்றது.

## ஊடக உரிமைத்துவம்:

**ஊடக உரிமைத்துவமானது ஊடக சுதந்திரத்தை நேரடியாக தாக்கத்தை உண்டாக்கும் காரணியாகும். மூலதனப்பிரச்சினை,முகாமைத்துவ மற்றும் நிர்வாக தீர்மானங்கள் ஊடக சுதந்திரத்தை பாதிக்கும் பிரதான காரணங்களாக காணப்படுகின்றன.**

**03 பட்டியல்: 2021 ஜனவரி: ஊடக சுயாதீனத்துவம் – நிகழ்வுகள் 03**

| இலக்கம் | நிகழ்வுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஊடக உரிமைத்துவம் மற்றும் ஊடக சுதந்திரம் | 01 |

1. ராவய பத்திரிகை ஆசிரியரை வேலை நீக்கம் செய்யப்பட்டமை:

   ராவய செய்திபத்திரிகையின் பிரதான செய்தி ஆசிரியரான விமலநாத் வீரரத்னவை சேவையில் இருந்து இடைநிறுத்துவதாக கூறி நிறுவனத்தின் தலைவர் விக்டர் ஐவன் ஜனவரி 31ஆம் திகதி தெரியப்படுத்தியுள்ளதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதற்கு பிரதான காரணமாக குறிப்பிடப்படுவது செய்திபத்திரிகை தற்காலிகமாக நிறுத்தக்கோரி தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளை கவனத்தில் கொள்ளாமல் தொடர்ந்து பத்திரிக்கை நிறுவனத்தை நடத்திச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டதே ஆகும். இது ஜனவரி 31 ஆம் திகதி காணப்படும் நிலைமையே ஆகும்.

## சட்டரீதியான பிரச்சினை:

**ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் சந்தேகநபர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியுமாக இருப்பின் வழக்கு தொடரப்பட வேண்டும் என்பதுடன் இங்கு நீதிமன்ற சுயாதீனத்துவம் மிக்கதாக செயற்படுவது மிக முக்கிய காரணியாகவும் திகழ்கின்றது.இலங்கை மற்றும் இன்னும் பெருமளவான நாடுகளில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களுக்கு தண்டனை கிடைக்கபெருவது மிக அரிதாகவே காணப்படுகின்றது .உதாரணமாக ஊடகவியலாளர் கொலை செய்யபடுதல் அல்லது ஊடகவியலாளருக்கு மிக மோசமான விதத்தில் குற்றங்கள் நடைபெறுதல் தொடர்பில் விசாரணை நடைபெறுவதில்லை என்பதினால் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதினால் அந்த குற்றங்களை புரிந்தவர்களுக்கு கடைசிவரை தண்டனை கிடைக்கபெருவதுமில்லை.குற்றங்களுக்கு தண்டனை கிடைக்கப்பெறாமையனது ஊடகவியலாளர்களின் மத்தியில் பயம் சூழ்ந்த நிலையை உண்டாக்குவதுடன் அதனுடாக ஊடகவியலாளர்களின் சுய தணிக்கை மற்றும் சுயகட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேலும் வலுசேர்க்க காரணமாக அமைய கூடும்.**

**4 பட்டியல் :2021 ஜனவரி : சட்டரீதியான பிரச்சினை – நிகழ்வுகள் 04**

| இலக்கம் | நிகழ்வுகள் | நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஊடகவியலாளர்கள் சம்பந்தமான நிகழ்வுகளில் தண்டனை விதிவிலக்குகளை தொடர்தல் | 01 |
| 02 | பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை இல்லாதொழித்தல் | 02 |

1. கருப்பு ஜனவாரியை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை மற்றும் முகநூல் பிரச்சார நடவடிக்கை

   சமூக ஊடகத்திற்கு எதிராக நடைபெற்ற குற்றங்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்ட கோரி “கருப்பு ஜனவரி”க்கு 11 வருடங்கள் முடிவடைந்ததுள்ளது என்பதை நினைவுகூர்வதுடன் அதன் தொடர்பில் “ தலைமுறை தலைமுறையாக அல்லது அந்த தாக்கத்தை ஏறபடுத்திய குற்றவாளிகளை சட்டத்திற்கு முன் கொண்டுவந்து ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுகொடுக்கும் வரை போராடுமாறு கோரி”, ஊடக சமூகத்திடம் மற்றும் பொதுமக்களிடமும் வேண்டிக்கொள்வதுடன் ஜனவரி 29 ஆம் திகதி ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டது.அந்நாளே சுதந்திர ஊடக இயக்கத்தின் முகநூல் பக்கத்தின் ஊடாக “ஜனவரி இன்னும் கருப்பு, நீதிக்காக கைகோர்ப்போம்” என்ற தொனியில் முகநூல் குழுவொன்றை ஆரம்பித்ததுடன் அதனூடாக குற்றம் இழைக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்று தரும் படி வேண்டி அழுத்தம் கொடுக்க கூடிய பதிவுகளை பிரசுரிக்க கோரி அதை நடைமுறையும்படுத்தியதுடன் ஜனவரி மாத கடைசியில் அந்த குழும உறுப்பினர் எண்ணிக்கை 102 ஆக வளர்ச்சிகண்டும் இருந்தது.

2. ஐரோப்பிய ஒன்றியத்தினால் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை

நீக்ககோரி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமை.

ஜனவரி 25 ஆம் திகதி இலங்கை அரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையில் வீடியோ தொழிநுட்பத்தின் ஊடக நடைபெற்ற 23 ஆவது ஒன்றிணைந்த கூட்டத்தில் இலங்கை அரசு GSP+ திட்டதின் கீழ் இலங்கை அரசினால் கையெழுத்திட்டுருக்கும் சர்வதேச பிரகடனங்கள் 23 தொடர்பாக தமது பொறுப்பை மீண்டும் கவனத்திற்குக்கொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் இது தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தையும் மீள் திருத்தம் மேற்கொள்ளகோரி நிற்பதாக அறியக்கிடைக்கின்றது.

இவ்வகையான வலியுறுத்தல்கள் ஊடக சமுகத்திற்கு தேவைபடுவதற்கான பிரதான காரணமாக அமைவது கருத்து தெரிவித்தல் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு அடக்குமுறைமையாக பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை முறையற்ற ரீதியில் உபயோகித்தல் தொடர்பாக முன் அனுபவம் இருப்பதனாலேயே ஆகும். ஆர்ப்பாட்டங்கள் தொடரப்பட்டும், பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டும் மற்றும் ஊடக அறிக்கை வெளியிட்டும் இந்த சட்டத்தை இல்லாமல் ஒழிக்க கோரிக்கை விடுத்து கடந்த காலங்களில் இருந்து இன்று வரை சுதந்திர ஊடக இயக்கமானது தனது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றது.

3. பிரகீத் ஏகநெலிகொட காணாமல் ஆக்கப்பட்டு 11 வருடங்கள் முடிவடைந்ததை ஒட்டி வலைத்தளம் ஒன்றை ஆரம்பித்தல்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்நேலிகொட வலுக்கட்டாயமாக கடத்திச்சென்று காணாமல் ஆக்கப்பட்டு நீதி கிடைக்காத நிலையில் பதினோரு வருடம் கடந்து இருப்பதுடன் அதனை நினைவுகூரும் வகையில் www.ekneligodaforum.org என்ற பெயரில் வலைத்தளம் ஒன்றை ஜனவரி 25 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது. “எக்னேலிகொட ஒன்றியம்” இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

4. படுகொலை, தாக்கப்படுதல் மற்றும் வலுக்கட்டாயமாக காணமல் ஆக்கப்படுதலுக்கு உள்ளாக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் நிகழ்வு ஜனவரி 16 ஆம் திகதி கொழும்பு ஜானகி ஹோட்டலில் நடைப்பெற்றது. “சமூக நீதிக்கான ஊடகவியலாளர்கள்” ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள் ,தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் உலகளாவிய பிரகடனங்களுக்கு ஏற்ப , ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன். அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்துகொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியாக மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பதே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதினால் ஒரு பகுதிகூருக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடாக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. ஆகவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் அந்த சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடக மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும். இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர குறிகாட்டிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


**Free Media Movement**

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25